நிலையத்தில் தர்மபுரி மாவட்டம், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களில் பயிரிடக் கூடிய நெல், தானியங்கள் ஆகியவை பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. கரும்புக்கு என்று கடலூரில் ஒரு ஆராய்ச்சி மையமும், சிறுகமணியில் ஒரு ஆராய்ச்சி மையமும், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் மேலாலத்தூர் ஆகிய 3 ஆராய்ச்சி மையங்களிலே கரும்பு பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இந்த 3 நிலையங்களில் கரும்புப் பயிர் ஆராய்ச்சி செய்து, அந்தப் பயிர்களை தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பயிரிட்டு, பயிரிடப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் அதனுடைய மகசூல் அதிகமாக இருக்கிறதென்று உண்மையை அறிந்த பிறகுதான் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அதை வெளியிடுகிறது. எனவே தர்மபுரி மாவட்டத்திற்கு வேண்டிய கரும்பு ரகங்களை மேலாலத்தூர் ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதனை ஆராய்ச்சி நடைபெற்று, பக்கத்தில் உள்ள தர்மபுரி மாவட்டத்தில் வெளியிடப்பட்டு, அங்கே பயிரிடப்பட்டு, அதிக வருவாயை உழவர் பெருமக்கள் பெற்று வருகிறார்கள்.

முற்பகல் *10–25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *372*, திரு. கே.ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. காஞ்சி பன்னீர்செல்வம் கேட்கிறார். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

372 -

தொழில் வல்லுநர்கள் மற்றும் சமூகநலச் சேவகர்களை இயக்குநர்களாக நியமித்தல்

***16389*-திரு. கே.ஏ. மனோகரன் :**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிப்காட் மற்றும் டி.ஐ.ஐ.சி. போன்ற நிதி நிறுவனங்களில் தொழில் வல்லுநர்கள் மற்றும் சமூக நல்ச் சேவகர்களை அவ்வாரியங்களின் இயக்குநர்களாக நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் உடனே பரிசீலிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தைப் (சிப்காட்) பொறுத்தவரை, வர்த்தகம் மற்றும் தொழில் துறைகளின் சார்பாக, தலைவர், தென்னிந்திய வர்த்தக சங்க சபை மற்றும் தலைவர், சென்னை தொழில் வர்த்தக சபை ஆகியோர் இயக்குநர் குழுவில் இடம் பெற்றுள்ளனர். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தைப் (டிக்) பொறுத்தவரை சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில் சங்கத்தின் தலைவரும், முன்னாள் தலைவரும் இயக்குநர் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்குழுவிலே பல வல்லுநர்கள் இடம் பெறக் கூடுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினாலும், அந்தக் குழுவிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்ப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட், டிக் எல்லாம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக இருக்கிற அமைப்புகள். இந்த அமைப்புகளிலே தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனை வழங்குபவர்களை அங்கே இயக்குநர்களாகப் போட்டிருக்கிறோம். அதிகாரப் பற்றற்றவர்களையும் போட்டிருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குகின்ற வாய்ப்பு அவர்களுக்கு சட்டமன்ற அவைக் களத்தில் இருப்பதால், இதுபோன்ற குழுக்களிலே அவர்களை இயக்குநர்களாக் நியமித்து, அந்தக் குறுகிய வட்டத்தில் அவர்களை அடைக்க இந்த அரசு விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொன்னார்கள். நல்ல பதில்தான். இருந்தபோதிலும் ஒரு சின்ன சஜஷன் கொடுக்கலாமென்று நினைக்கிறேன். சிப்காட் மற்றும் டிக் நிறுவனங்களில் தொழில் வல்லுனர்கள் என்று கருதப்படுகிற எக்ஸ்பர்ட் இன்ஜினியர்ஸ் மற்றும் வர்த்தக ரீதியில் எம்.பி.ஏ. படித்தவர்களை, அனுபவ ரீதியாக அவர்களைச் சேர்த்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என்று நான் சிப்காட், டிக் நிறுவனங்களுக்குச் செல்லும்போதெல்லாம்

கூட்டங்களில் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அப்படி இருந்தால் நல்ல அறிவுரை பெறலாமென்ற காரணத்தால்தான் இந்த எண்ணத்தை நான் தெரிவிக்கிறேன். இந்த யோசனையை ஏற்று அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவில் இடம் பெற்றவர்கள்—அதிகாரிகள் தவிர மற்றவர்கள், தென் இந்திய தொழில் வர்த்தக சபை மற்றும் சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில் சங்கத் தலைவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் சிறந்த ஆலோசனைகளை இந்த அரசுக்குச் சொல்லுகிறார்கள். இந்தக் குழுவில் இருந்துதான் ஆலோசனை சொல்ல வேண்டுமென்று இல்லை. வெளியிலே இருந்துகூட ஆலோசனைகளை எழுத்து மூலமாகச் சொன்னாலும் அல்லது அமைச்சரிடத்தில் சொன்னாலும், அல்லது தொழிற்துறைச் செயலாளர் மற்றும் அதிகாரிகளிடம் சொன்னாலும், எப்படிப்பட்ட இடத்திலிருந்து ஆலோசனைகளைத் தந்தாலும் இந்த அரசு நல்ல ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு, அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 373, டாக்டர் க. கோபால், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. து. மூர்த்தி கேட்கிறார். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

373-

நன்னிலம் பனங்குடியில் சுத்திகரிப்பு ஆலையில் உபதொழில்கள் தொடங்குதல்.

***24166-**டாக்டர் க. கோபால் :*

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நன்னிலம், பனங்குடியில் இயங்கவுள்ள சென்னை சுத்திகரிப்பு ஆலையின் மூலம் கிடைக்கும் கச்சாப் பொருட்களைக் கொண்டு உப தொழில்கள் தொடங்க அரசிடம் ஏதும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.